**காரைநகர்பிரதேச சபை**

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 14 மார்ச் 2019 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 30 மே 2019 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஒக்ரோபர் 2019 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து காரைநகர் பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | பதில் தரப்படவில்லை |

**(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 03 மயானங்களின் பெறுமதிகள் கணிப்பிடப்பட்டு கணக்குகளில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | மயானங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். | மயானங்களின் பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டு இறுதிக்கணக்கில் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**1.4 இணக்கமின்மைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் உப பிரிவு 16 (2) | வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்ட போதும் நிதிக்கூற்றுக்களில் இணைக்கப்படவில்லை. |
| (ஆ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிருவாக விதி | | | |
| | (i) அத்தியாயம் III பிரிவு 32 | பிரதேச சபையின் எல்லைக்குள் 8,707 எண்ணிக்கையான ஆதனங்கள் உள்ள போதும் சபையினால் இதுவரை ஆதனவரி மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஆதன வரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். | விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் தாமதத்தினால் ஆதன மதிப்பீடானது நிறைவு செய்யப்படவில்லை. |
| | (ii) அத்தியாயம் X இன் பிரிவு 193 | மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத்திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத்திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட வேண்டும் | வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பீடு செய்யப்பட்டு கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் நிதிப்பிரமாணம் 371 | சபையினால் வழங்கப்பட்ட ரூபா 215,928 பெறுமதியான முற்பணங்கள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணங்களின் படி முற்பணங்கள் தீர்வுசெய்யப்படவேண்டும் | ரூபா 215,928 முற்பணம் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | மாகாண நிதி ஒழுங்கு விதி நிதி ஒழுங்கு விதி இல 288 | பிரதம செயலாளரின் அனுமதியின்றி பிரித்தானிய நலன்புரிச் சங்கத்திடம் இருந்து சபை ரூபா 2,138,000 இனை நன்கொடையாக பெற்றிருந்தது. | மாகாண திறைசேரியிடம் இருந்து உரிய அனுமதியினை பெற்றுக்கொள்ளவேண்டும் | பிரதேச சபைகள் சட்டம் மற்றும் சபைத் தீர்மானத்திற்கு அமைய நிதி பெறப்பட்டுள்ளது. இருந்தும் எதிர்வரும் காலங்களில் உரிய அனுமதி பெறப்படும். |

### 1.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரி சட்டத்தின் 20 ஆம் பிரிவு மற்றும் பெறுகைகள் வழிகாட்டி 5.4.11 பிரிவுகளில் தெரிவிக்கப்பட்டதன் பிரகாரம் மீளாய்வாண்டில் வழங்குனர்களுக்கு ரூபா 785,068 தொகை பெறுமதி சேர்க்கப்பட்ட வரியாக கொடுப்பனவு செய்யப்பட்ட போதிலும்,‘‘பெறுமதி சேர்க்கப்பட்ட வரிப்பற்றுச்சீட்டு’’ பெறப்பட்டிருக்காததுடன் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டிய வரித்தொகையிற்கு உரிய தீர்வு காணப்பட வேண்டும். | ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரிவிபரங்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கும் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கும் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம், குறித்த சில காணிகள் விற்பனை மீது 1% சதவீத விற்பனை வரி அறிவிடப்படவேண்டிய போதிலும், சபையினால் அவற்றினை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின்படி காணிகள் விற்பனை மீது 1% விற்பனை வரி அறவிடப்பட வேண்டும். | ஆதன மதிப்பீட்டின் பின்பு அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம்,2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,934,011 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,186,097 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் ❖ | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் ❖ | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 10,000 | - | 10,060 | - | 10,000 | - | 6,750 | - |
| வாடகைகள் | 2,202,200 | - | 2,024,131 | - | 2,402,000 | - | 2,775,481 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 269,975 | - | 328,170 | - | 256,800 | - | 289,339 | - |
| ஏனைய வருமானம் | 29,638,381 | - | 33,331,107 | - | 30,752,724 | - | 29,705,071 | - |
| | **32,120,556** | **-** | **35,693,467** | **-** | **33,421,524** | **-** | **32,776,641** | **-** |

❖ பட்டியலிடப்பட்ட வருமானம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 32,776,641ஆக இருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 35,693,467 ஆக அதிகரித்துள்ளமையால் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 ஆம் | பட்டியல்படுத்தப்பட்ட வருமானத்தினை உறுதிப்படுத்த வேண்டும். | இனி வருங்காலங்களில் வருமானமானது பட்டியலிடப்பட்டு அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |

ஆண்டில் வருமான சேகரிப்பின் செயலாற்றல் 2,916,826 இனால் அதிகரிக்கப்பட்டுள்ளது. எனினும் பட்டியல்படுத்தப்பட்ட வருமானமும் திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதிக் கூற்றில் நிலுவைகளுமற்றுக் காணப்படுவதனை உறுதிப்படுத்த முடியாதுள்ளது.

**2.2.3 வீதவரி மற்றும் வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் உள்ள 05 மயானங்களிற்கு சபையினால் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் மயானங்களில் உடலை தகனம் செய்வதற்கான அனுமதி பெறப்பட்டு தகனம் செய்யப்பட்டிருக்காததுடன் அதற்கான வரியும் சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மயானங்களின் வரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மயானங்களின் வரி அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 494,704 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 5,416,868 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிலுவையாக உள்ள நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 85,000 மற்றும் முத்திரைக்கட்டணம் ரூபா 5,200,597 என்பவற்றினை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம்,30 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அனைத்து விடயங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 30 செயற்பாடுகளிற்கும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | அனைத்து உபவிதிகள் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 30 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 30 செயற்பாடுகளிற்கும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்ட செயற்திட்டத்திற்கான செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், சபையினால் செயற்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 21 செயற்பாடுகளில் 05 செயற்பாடுகள் மாத்திரம் செயற்படுத்த பட்டிருந்தது ஏனைய செயற்பாடுகள் சபையின் பரிந்துரைக்கமைய, மாற்றப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | செயற்படுத்தப்பட வேண்டிய செயற்பாடுகள் யாவும் செயற்படுத்தப்படல் வேண்டும். | 21 செயற்றிட்டங்கள் நிதி கிடைக்கப்பெறாமையினால் நிறைவேற்றப்படாது இருந்தது. |

### (ஈ) எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினை அடைவதற்கு தவறியமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பாரம்பரிய உணவகமும் சிறுவர் பூங்காவும செயற்பாட்டின் செயலாற்றலுக்கு ரூபா 12,230,000 தொகையொன்று ஏற்பட்டதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு அடைந்து கொள்ளப்பட்டிருந்த போதிலும், எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | குறிப்பிட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்திற்குரிய எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளும் அடையப்பட வேண்டும். | பாரம்பரிய உணவகமும் சிறுவர் பூங்காவும்இயங்கி வருகின்றது. |

### (உ) பணிகளை நிறைவேற்றலின் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தில்லை மயானம் புனரமைப்பிற்கான மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 2,000,000 பெறுமதியான வேலை 2018 ஒக்தோபர் 05 ஆந் திகதியில் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அது நிறைவு செய்யப்படாதிருந்தது.<br><br>கால நீடிப்பு வழங்கப்பட்டமைக்கான காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கவில்லை. | செயற்பாடுகளினை உரிய நேரத்தில் முடிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காலநிலை காரணமாக காலதாமதம் ஏற்பட்டது. |

### (ஊ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | நாள்தோறும் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் நறுக்கப்பட்டு மண்தட்டு இடப்பட்டு மூடப்படுவதில்லை. | திண்மக்கழிவுகள் நறுக்கப்பட்டு சுற்றுச்சூழலிற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மண்தட்டிடப்பட்டு மூடப்பட வேண்டும். | கழிவுகள் சேகரிக்கப்பட்டு தரம் பிரிக்கப்பட்டு விற்கப்படுவதுடன் ஏனையவை தரையில் புதைக்கப்படுகின்றன. |
| (ii) | தேசிய கொள்கைகளின்படி திண்மக்கழிவுகள் தரம் பிரிக்காமல் சேகரிக்கப்படுகிறது. | திண்மக்கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு சேகரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் திண்மக்கழிவு முகாமைத்துவம் தேசிய கொள்கைக்கு அமைவாக செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்@ராட்சி உதவியாளரினால் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் உரிய காலத்தில் சமர்பிக்கப்படாமையினால் பிரதேசசபைக்குரிய முக்கிய பணிகள் நிறைவேற்றப்படாமல் இருந்தது. | உள்@ராட்சி உதவியாளரினால் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் உரிய காலத்தில் சமர்பிக்கப்பட வேண்டும். | எமது சபைக்கு உள்@ராட்சி உதவியாளர் நியமிக்கப்பட்டதும் அவ்வேலைகள் நிறைவேற்றப்படும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 08 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட தொகைக்கு சமனான பதவியினர் நியமிக்கப்பட் வேண்டும். | குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் சில்லறை கடன் வழங்குநருக்கு கொடுக்கப்பட வேண்டிய ரூபா 1,016,038 கொடுத்து தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சில்லறை கடன் வழங்குநருக்கு கொடுக்கப்பட வேண்டிய தொகை கொடுத்து தீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேணடும். | நிதி கிடைக்கப்பெற்றதும் தீர்வு செய்யப்படும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் பயன்படுத்தப்பட்ட WP JR 7318 இலக்க வாகனமானது கடந்த 2012 ஆம் ஆண்டு தொடக்கம் திருத்தம் மேற்கொள்ள வேண்டிய நிலையில் இருந்த போதும் அதனை திருத்துவதற்கு சபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திருத்தம் செய்யக்கூடிய வாகனங்களினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | உரியநடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.5.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் பயன்பாட்டிலுள்ள ரூபா 6,390,000 பெறுமதியான 01 வாகனம் சபையின் பெயருக்கு உரிமை மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையின் பெயருக்கு உரிமை மாற்றப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | குத்தகையில் பெற்றுக் கொள்ளப்பட்ட WPPF -7712 இலக்கவாகனம் குத்தகைக்காலம் முடிவடைந்த பின்பு உரிமை மாற்றப்படும். |

## 3.6 பெறுகை

### 3.6.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பெறுகைள் திட்டமானது பிரதேச சபையினால் வழங்கல்கள் மற்றும் சேவைகள் செயற்பாடுகளுக்காக தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். இருந்த போதிலும் சபையினால் சேவைகளுக்காக பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைள் திட்டமானது அனுமதிக்கப்பட்ட மாதிரிக்கமைவாக தயாரிக்கப்பட வேண்டும். | சேவைகளுக்கான பெறுகைத்திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் ஆளுக்குரிய வரும்படிகள், வட்டிக்கொடுப்பனவுகள், பங்குலாபங்கள், மிகையூதியங்கள், மானியங்கள், போன்ற செலவினங்கள் சாதகமாகவும் பயணச்செலவுகள், மூலதனச் சொத்துக்களைப் பழுதுபார்த்தலும் பேணலும், ஏற்றியிறக்கல், தொடர்பிணைப்பு பயன்பாட்டுச்சேவை மற்றும் பிறசேவைகள், வழங்கு பொருட்களும் தேவைப்பொருட்களும் உதவுதொகைகள், உதவிப்பணங்கள், ஓய்வூதியங்கள், இளைப்பாற்று நயங்கள், பணிக்கொடைகள் செலவினம் பாதகமாகவும் காணப்படுகின்றன. | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடுவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | ஆளுக்குரிய வருப்படிகளுக்கான வீதம் அதிகரித்தமை ஆகும். |